of a tradition that the Ministers consider it good etiquette to make important announcements in the House when it is in session before doing so elsewhere.

இந்த மரபை அமைச்சர்கள் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது எழுப்பப்பட்டுள்ள பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, உரிமை மீறல் பிரச்சினை ஏதுமில்லை என்று கூறி, நிறைவு செய்கிறேன்.

1. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) முதலமைச்சர் டெல்லியில் பிரதமரைச் சந்தித்துப் பேசியது குறித்த விவரங்கள்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று, இந்த நாட்டின் பிரதமரைச் சந்தித்து, மாநிலத்தின் நிலை பற்றிப் பேசியதோடு, உணவு தானிய ஒதுக்கீடு, நிதியுதவி ஆகியவற்றைக் கேட்டு வந்ததாகவும், மேலும் பல்வேறு திட்டங்கள் குறித்து மத்திய அரசிடம் வலியுறுத்தி வந்ததாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. எனவே அதுபற்றிய முழு விவரத்தை இந்த அவையின் கவனத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையின் மூலமாகச் சமர்ப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலேயே அது குறித்து நிருபர்கள் கூட்டத்தில் விளக்கியிருக்கிறேன். அறிக்கையாகத் தரத் தேவையில்லை என்று கருதுகிறேன். கவர்னர் உரைக்குப் பதிலளிக்கிற நேரத்தில் அது பற்றிக் குறிப்பிடுகிறேன்.

(இ) ஏற்கெனவே தீர்ப்பளிக்கப்பெற்ற பிரச்சினை குறித்து

திரு. சா பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நேற்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது ஓர் உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தேன். தாங்கள் அது குறித்துத் தீர்ப்புத் தந்தீர்கள். ஆனால், இன்று பத்திரிகைகளில் பார்க்கிறபோது [illegible] உரிமைப் பிரச்சினை எழுப்பியவரும் அது என்ன பிரச்சினை என்று சொல்லவில்லை, அப்போது தீர்ப்புத் தந்த மாண்புமிகு சபாநாயகரும் அது என்ன பிரச்சினை என்று

1989 பிப்ரவரி 14] [திரு. சி. பீட்டர் ஆல்போன்ஸ்]

சொல்லவில்லை" என்று எழுதியிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பை நான் இப்போது கேள்விகேட்டுப் பேச விரும்பவில்லை ஆனால் அது என்ன பிரச்சினை என்று சொல்லுவதற்கு என்னை அனுமதிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது நேற்றே முடிந்துபோன பிரச்சினை. அருள்கூர்ந்து என் அறைக்கு வந்து என்னைச் சந்தித்து கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுகிறேன்.

(ஆ) முதலமைச்சர் டெல்லியில் பிரதமரைச் சந்தித்துப்பேசியது குறித்த விவரங்கள்—தொடர்ச்சி.

* **திரு. கோ. பூவராகன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே ஆளுநர் உரையின்மீது பதிலளிக்கிற நேரத்திலே அதற்கெல்லாம் பதில் கூறுவதாகச் சொன்னார்கள். முதல்வர் அவர்கள் இந்த மன்றம் தொடங்கிய பிறகு முதன்முறையாக டெல்லிக்குச் சென்று பாரதப் பிரதமர், குடியரசுத் தலைவர், அணைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர்கள் ஆகியவர்களை எல்லாம் பார்த்து நம்முடைய தமிழ்நாட்டிற்கு வேண்டிய வளர்ச்சித் திட்டங்கள் பற்றியும், நெய்வேலி நிறுவனத்திடமிருந்து பங்கு அல்லது 'ராயல்டி' பெறுதல், இன்னும் இது போன்று உணவுப் பங்கீட்டில் அதிக ஒதுக்கீடு, மற்றும் இலங்கைப் பிரச்சினை போன்ற பல்வேறு பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே பத்திரிகை நிருபர்களிடத்தில் சொன்னதைத்தான் நாம் பார்க்க முடிந்தது. இருந்தாலும், இந்தப் புதிய ஆட்சி ஏற்பட்ட பிறகு, முதல்வரவர்கள் இதுவரையில் இல்லாத முன்னுதாரணமாக, முன்மாதிரியாக, இந்த அமைச்சரவை நடைபெற வேண்டுமென்று பல முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். அதைப் போல, இந்த மன்றம் நடக்கிற காலத்திலே, முதல்வரவர்கள் ஒரு முன்மாதிரியாக தனியாகத் தெளிவான ஓர் அறிக்கையை எல்லோரும் அறிந்துகொள்ளும் அளவுக்கு இந்த மன்றத்திலே வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

— (முற்பகல் 9-10)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவரவர்களே, நான் தொடக்கத்திலேயே, பதில் அளிக்கும் நேரத்திலே விவரங்கள் சொல்வதாகச் சொன்னேன். ஏனென்றால் அதிக